**அபி வெனுவென் அபி நிதியம் - 2020**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 அபிப்பிராயம்

அபி வெனுவென் அபி நிதியத்தின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஐந்தொகை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான வருமானக்கூற்று, தேறிய சொத்துக்களில் மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்களுக்குரிய குறிப்புகள், பொழிப்புடனான முக்கிய கணக்கீட்டுக் கொள்கைகள் என்பவற்றை உள்ளடக்கிய ˙ 2020 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரை மற்றும் 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய, எனது பணிப்பின், கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புரைகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

நிதியத்தின் நிதிக்கூற்றுக்கள் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவுற்ற ஆண்டிற்கான அதன் நிதிச் செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல் என்பன உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் தெரியும் விதத்தில் இலங்கைப் பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கிணங்க நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது இந்த அறிக்கையில் அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தினதும் அதனோடு தொடர்புடைய தரப்பினரதும் பொறுப்பு

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும்போது, நிதியத்தின் தொடர்ந்தியங்கும் ஆற்றலைத் தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும். முகாமைத்துவம் நிதியத்தைக் கணக்கொழிப்பதற்குக் கருதினால் அல்லது மாற்றீடு இல்லாவிடின் செயற்பாடுகளை இடை நிறுத்த நடவடிக்கை எடுத்தாலே தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் மற்றும் குறித்த விடயங்களை வெளிப்படுத்தல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதியத்தின் நிதி அறிக்கையிடல் செயற்பாடு தொடர்பான பொறுப்பு அவ்வாளுகைக்குட்பட்ட தொடர்புடைய தரப்பினரால் மேற்கொள்ளப்படும்.

2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் நிதியத்தின் வருடாந்த மற்றும் காலநேரத்திலான நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்க கூடிய வகையில் தனது வருமானம், செலவினம்,

சொத்துக்கள் மற்றும் பொறுப்புகள் தொடர்பாக உரிய வகையில் ஏடுகள் மற்றும் அறிக்கைகளை பேணுதல் அவசியமாகும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலை வழங்குதல் மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கையை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலாக இருந்தபோதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும்போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்கள் அற்றது என்பதற்கான உறுதிப்படுத்தல் அல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் தாக்கமளிப்பதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதாரத் தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக ஏற்படக்கூடிய தாக்கங்களைக் கருத்திற் கொள்ள வேண்டும்.

என்னால் துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போதும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடி ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு நிதியத்தின் உள்ளகக் கட்டுப்பாடு சம்பந்தமாக புரிந்து கொண்ட போதும், உள்ளகக் கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வத் தன்மை தொடர்பாக அபிப்பிராயத்தை வெளியிடக் கருதவில்லை.

- முகாமைத்துவம் பயன்படுத்திய கணக்கீட்டு கொள்கைகளின் சரியான தன்மையினையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகளினதும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினதும் நியாயபூர்வத் தன்மையை மதிப்பாய்வு செய்தல்.

- சம்பவங்கள் அல்லது நிலைமை காரணமாக நிறுவனம் தொடர்ந்தியங்குவது தொடர்பாக போதியளவு நிச்சயமற்ற தன்மை உள்ளதா என்பது தொடர்பாக பெறப்பட்ட கணக்காய்வுச் சான்றினடிப்படையில் கணக்கீடு சம்பந்தமான நிறுவனத்தின் தொடர்ந்தியங்கும் தன்மை தொடர்பான அடிப்படையைப் பயன்படுத்தலாம் எனத் தீர்மானிக்கப்பட்டது. பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் எண்ணுவதாயின் நிதிக்கூற்றுக்களிலுள்ள அத்தகைய வெளிப்படுத்தல்களுடன் எனது கணக்காய்வு அறிக்கையில் கவனம் செலுத்த வேண்டும். அந்த வெளிப்படுத்தல் போதுமானதாக இல்லாதிருப்பின் எனது அபிப்பிராயம் மாற்றத்திற்குள்ளாக வேண்டும். எனது முடிவானது கணக்காய்வு அறிக்கைத் தினம் வரையான கணக்காய்வுச் சான்றுகளின் அடிப்படையிலானவை. எவ்வாறாயினும், எதிர்கால சம்பவங்கள், அல்லது நிலைமை காரணமாக தொடர்ந்தியங்கும் தன்மை முடிவுக்கு வரலாம்.

- வெளிப்படுத்தல்களை உள்ளடக்கிய நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான அடிப்படையாகக் கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் உசிதமானவாறும் நியாயமானவாறும் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளமையை மதிப்பாய்வு செய்தல்.

முடியுமான அளவு மற்றும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்கு கணக்காய்வு விடயப் பரப்பும் விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமை, நடைமுறைகள், ஏடுகள், அறிக்கைகள், மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிமைக்கப்பட்டுள்ளனவா என்பதும் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணப்படுகின்றதா என்பதும்,

- நிதியத்தின் ஆளுநர் சபையால் வழங்கப்பட்ட ஏதாவதொரு எழுத்துமூலச் சட்டம் அல்லது ஏனைய பொது அல்லது விசேட பணிப்புரைகளுடன் நிதியம் இணங்கியிருந்ததா என்பதும்,

- அதன் அதிகாரங்கள், பணிகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனுடனும் ஆக்க பூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.5 நிதிக்கூற்றுக்கள்

### 1.5.1 நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் தொடர்பான உள்ளகக் கட்டுப்பாடு

கொடுக்கல் வாங்கல்களின் முகாமைத்துவத்தின் பொதுவான மற்றும் திட்டவட்டமான அதிகாரத்துடன் நடைமுறைப்படுத்தல், உரிய நிதியிடல் நியமங்களுக்கிணங்க நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதற்கு தேவையான விதத்தில் கொடுக்கல் வாங்கல்களைப் பதிவு செய்தல் மற்றும் சொத்துக்களுக்கான கணக்கீட்டு நடவடிக்கைகளைப் பேணுதல், முகாமைத்துவத்தின் பொதுவான மற்றும் குறிப்பான அதிகாரத்துடன் மாத்திரம் சொத்துக்களில் பிரவேசித்தல், பதிவு செய்யப்பட்ட சொத்துக்களுக்கான கணகளித்தகைமை பேணப்பட்டு சொத்துக்களுடன் நியாயமான காலப்பகுதியினுள் கணக்கிணக்கம் மற்றும் வேறுபாடுகள் காணப்படுமாயின் அவை தொடர்பில் உரிய நடவடிக்கை எடுத்தல் ஆகியவற்றுக்காக நியாயமான உறுதிப்பாடொன்றை பெற்றுக்கொள்ள போதியளவிலான ''சிறந்தவாறு திட்டமிடப்பட்ட'' உள்ளக கணக்கீட்டு கட்டுப்பாட்டுக் கட்டமைப்பை நிறுவனம் நடைமுறைப்படுத்துவது அவசியமானதாகும்.

## 1.6 பெற வேண்டிய மற்றும் கொடுப்பனவு செய்ய வேண்டிய கணக்குகள்

### 1.6.1 பெற வேண்டிய பணம்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| றணஜயபுர வீட்டுத் திட்டத்தின் 707 குடியிருப்பாளர்களிடமிருந்து 2020 திசெம்பர் 31 இல் அறவிடப்பட வேண்டியிருந்த தவணைப் பண நிலுவை ரூபா 29,070,660 என்பதுடன் அதில் ஓராண்டிற்கு மேற்பட்ட | எதிர்காலத்தில் இந்நிலுவைத் தவணைகளை விரைவில் அறவிடுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். | ஒப்பந்தத்தின் பிரகாரம் நிலுவைத் தொகையை அறவிடப்படுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | |
|---|---|
| காலமாக நிலுவையாகக் காணப்படுகின்ற கடன் தவணைகளின் பெறுமதி ரூபா 17,326,401 ஆகும். இந்நிலுவைத் தவணையை அறவிடுதல் மற்றும் அது தொடர்பான பின்தொடரல் நடவடிக்கைகளை மேற்கொள்ளல் என்பன திருப்தியான மட்டத்தில் காணப்படவில்லை. | மேலும் 2020 ஆம் ஆண்டில் நிலவிய கொவிட் தொற்று நோய் காரணமாக சேவையில் ஈடுபடுகின்ற இராணுவ அதிகாரிகளிடமிருந்து 2020 ஏப்ரல் மற்றும் மே மாதங்களிற்கான தவணைப் பணங்கள் அறவிடப்படவில்லை. |

**1.7 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்கள் முதலியவற்றுடன் இணங்காமை**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | | இணங்காமை | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | 2017 இன் 19 ஆம் இலக்க இலங்கை நிலைபேறான அபிவிருத்திச் சட்டம் | நிதியத்தினால் நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள் தீர்மானிக்கப்பட்டுள்ளதுடன் ஆனால் அந்நோக்கங்களை அடைந்து கொள்வதற்கு தேவையான இலக்குகளை தீர்மானித்தல் மற்றும் அவ்விலக்குகளை அடைந்து கொள்வதற்கான முன்னேற்றத்தினை அளவிடும் குறிகாட்டிகளைத் தயாரித்தல் மீளாய்வாண்டில் மேற்கொள்ளப்படவில்லை. | கருத்துரை வழங்கப்படவில்லை. | 2017 இன் 19 ஆம் இலக்க நிலைபேறான அபிவிருத்திச் சட்டத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | நிதிப்பிரமாணம் 877(2)(ஈ) | ஒவ்வொரு காலாண்டுகளின் இறுதியிலும் நிதியத்தின் முன்னேற்றம் மீளாய்வு செய்யப்படக்கூடியவாறு நிதியத்தின் பிரதான பணிகள் தொடர்பாக காலாண்டு அறிக்கையொன்று தயாரிக்கப்பட்டு காலாண்டு முடிவடைந்து 15 நாட்களுக்கு முன்னர் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டிய | கருத்துரை வழங்கப்படவில்லை. | நிதிப்பிரமாணம் 877(2)(ஈ) பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | போதிலும் 2020 இன் இறுதிக் காலாண்டிற்காக அந்த அறிக்கை கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை. | | |
| (இ) | நிதிப்பிரமாணம் 877 | நிதிக்கூற்றுக்கள் மும்மொழிகளிலும் தயாரிக்கப்பட்டு சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் 2020 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் சிங்கள மொழியில் மட்டுமே சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. | கருத்துரை வழங்கப்படவில்லை. | நிதிப்பிரமாணம் 877 இன் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**1.8 முதலீட்டு முகாமைத்துவம்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நிதியத்தின் நடைமுறைக் கணக்கொன்று மீளாய்வாண்டில் பேணப்பட்டு வந்ததுடன் சராசரி மாத நிலுவை ரூபா 1,618,991 ஆக இருந்ததுடன் சேமிப்புக் கணக்கில் பேணப்படுகின்ற சராசரி மாத நிலுவை ரூபா 36,410,626 ஆகும். அந்த மிகை நிலுவையை பயனுள்ள முதலீடுகளில் ஈடுபடுத்தப்பட்டு நிதியத்தைத் திரட்டுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | 7040000 ஆம் இலக்க நடைமுறைக் கணக்கில் ரூபா 2.00 மில்லியன் தொகை வைக்கப்பட்டுள்ளது. அக்கணக்கிற்கு வருமானம் ரூபா 2.00 மில்லியனைத் தாண்டும் போது தானாகவே நிதிய முகாமைத்துவக் கணக்கிற்கு செலவு வைக்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இலக்கம் 73249610 ஆன நிதிய முகாமைத்துவக் கணக்கின் பூரண அல்லது பகுதி வீட்டு மற்றும் நிர்வாகச் செலவுகளை தீர்ப்பதற்காகக் குறிப்பிட்ட மாதங்களில் ரூபா 36.4 மில்லியனுக்கும் அதிகமான தொகையொன்று செலவிடுவதற்கு வேண்டிருக்கும். மேற்குறிப்பிடப்பட்ட காரணங்களினால் மிகை நிலுவையை பயனுள்ள முதலீடுகளில் ஈடுபடுத்த முடியாதிருந்தது. | நிதியத்தின் திட்டமிடப்பட்ட நடவடிக்கை களுக்கான வரவு செலவுத் திட்டக் கணிப்பீடுகள் செய்யப்பட்டு அதன் பிரகாரம் செலவுகளுக்கான பணத் தேவைப்பாடு மற்றும் முதலீட்டுத் திட்டங்கள் தயாரிக்கப்படல் வேண்டும். |

## 2. நிதிசார் மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவு ரூபா 49,050,324 பற்றாக்குறை என்பதுடன் அதற்கொத்த முன்னைய வருடத்தின் பற்றாக்குறை ரூபா 169,350,051 ஆகும். அதன் பிரகாரம் நிதி விளைவுகளில் ரூபா 120,299,727 ஆன முன்னேற்றமொன்று அவதானிக்கப்பட்டது. இம்முன்னேற்றத்திற்கு செயற்திட்ட அபிவிருத்திச் செலவுகள் ரூபா 189,961,246 ஆல் குறைவடைந்தமை மற்றும் செயற்திட்ட செயற்பாட்டுச் செலவுகள் ரூபா 6,747,031 ஆல் குறைவடைந்தமை பிரதான காரணங்களாக இருந்தன.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) 2020 இன் செயல் நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் மீளாய்வாண்டில் ரணவிரு 400 பகுதி வீடுகளைப் பூரணப்படுத்துவதற்காக ரூபா 750,000 வீதம் மற்றும் ரணவிரு பூரண வீடமைப்புத் திட்டத்தின் கீழ் 50 வீடுகளை நிர்மாணிப்பதற்கு ரூபா 1,500,000 வீதம் உதவிப்பணம் வழங்குவதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும் முறையே 38 பகுதி வீடுகள் மற்றும் 09 பூரண வீடுகளுக்காக இரண்டாவது தவணைப்பணம், எவ்வித வீடொன்றுக்காகவும் இறுதித் தவணைப் பணம் என்பன கொடுப்பனவு செய்யப்படவில்லை. அதன் பிரகாரம் நிதிச் செயலாற்றல் நூற்றுக்கு 61 வீதமான மட்டத்தில் காணப்பட்டது. | கருத்துரை வழங்கப்படவில்லை. | வழங்கப்படுகின்ற பலன்களில் இருந்து நிர்மாணப் பணிகளை முடிப்பதற்கு பயனாளிகள் ஊக்குவிக்கப்பட வேண்டும் மற்றும் நிதியத்தினால் உன்னிப்பான மேற்பார்வை கண்காணிப்பு மற்றும் பின்தொடரல்கள் என்பன மேற்கொள்ளப்படல் வேண்டும். |

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16.2 ஆம் பிரிவின் பிரகாரம் மற்றும் நிதிப் பிரமாணம் 877(2)(ஈ) ஏற்பாடுகளின் பிரகாரம் நிதியத்தினால் வருடாந்த நிதிக்கூற்றுக்களுடன் செயலாற்றல் | கருத்துரைகள் வழங்கப்படவில்லை. | சட்டத்தின் 16.2 ஆம் பிரிவு மற்றும் நிதிப் பிரமாணம் 877(2)(ஈ) ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை |

| | | | |
|---|---|---|---|
| | அறிக்கையொன்று சமர்ப்பிக்கப்பட வேண்டியுள்ள போதிலும் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | | எடுக்கப்படல் வேண்டும். |

**4.2 வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டம்**

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2008 இன் 06 ஆம் இலக்க அபி வெனுவென் அபி நிதியச் சட்டத்தின் 11(6) பிரிவின் பிரகாரம் நிதியத்தின் நிதிக் கூற்றுக்கள் மற்றும் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை நிதியத்தின் தொடக்கத்திலிருந்து 2019 ஆம் ஆண்டு வரையில் பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை. | கருத்துரைகள் வழங்கப்படவில்லை. | சட்டத்தின் 11(6) பிரிவின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

**4.3 உள்ளகக் கணக்காய்வு**

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டிற்கான நிதியக் கணக்காய்விற்காக உள்ளகக் கணக்காய்வு நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் பெறுவனவுகள் மற்றும் கொடுப்பனவுகள், இறுதிக் கணக்குகள் தயாரித்தல் தொடர்பாக உள்ளகக் கணக்காய்வுப் பரிசோதனை மேற்கொள்ளப்படுவதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும் அது செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை. | கருத்துரைகள் வழங்கப்படவில்லை. | நிதியத்தின் உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமைகளின் செயற்திறனை மதிப்பிடுவதற்கு உள்ளகக் கணக்காய்வொன்று மேற்கொள்ளப்படல் வேண்டும். |

**4.4 பாதீட்டுக் கட்டுப்பாடு**

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நிதிப்பிரமாணம் 877(2)(இ) இன் 7 ஆம் பந்தியின் பிரகாரம் 2020 ஆம் ஆண்டிற்காக அங்கீகரிக்கப்பட்ட பாதீட்டு எல்லை மற்றும் உள்ளபடியான எல்லைகள் இணக்கப்பட்டு முரண்களுக்கான காரணங்களுடன் பாதீட்டுடன் இணக்கக்கூற்று நிதிக் கூற்றுக்களுடன் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | கருத்துரைகள் வழங்கப்படவில்லை. | நிதிப்பிரமாணம் 877(2)(இ) இன் 7 ஆம் பந்தியின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |